இருப்பதால், இராசசிங்கமங்கலத்திற்கு தேவக்கோட்டையிலிருந்து டவுன் பஸ் விடுவதற்கு மீண்டும் பரிசிலனை செய்து, உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டையிலிருந்து இராசசிங்கமங்கலத்திற்கு எவ்வளவு தூரம் என்கிற கணக்கு என்னிடத்தில் இல்லை. ஆனால் திருவாடானை வரும்பேருந்தை இராசசிங்கமங்கலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டு இருப்பதால், அந்த தூரம் 9·45 கிலோ மீட்டராகும். ஏற்கெனவே அந்தப் பேருந்து 24 கிலோ மீட்டர் ஓடிக்கொண்டு இருப்பதால், அதை நீட்டிக்க முடியாது. எனவே 30 கிலோ மீட்டருக்கு மேல் அந்த தூரம் இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது தேவக்கோட்டையிலிருந்து டவுன் பஸ் செல்வது குறித்த கேள்வியாக இருந்தாலும், வடாற்காடு மாவட்டம் வேலூரில் ஓடும் தந்தை பெரியார் பஸ்கள் வயதான பஸ்களாக, பழைய பஸ்களாக இருக்கின்றன...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வயதான பஸ்கள் என்றெல்லாம் சொல்வது சரியல்ல. மூலக்கேள்வியை ஒட்டியதாக இல்லாததால், அனுமதி மறுக்கப்படுகிறது.

நகரப் பேருந்துகள் செல்லும் அதிகபட்ச தூரம்.

வினா எண் 353—திரு. வி. பாலகிருஷ்ணன், திரு. வேடசந்தூர் வி. வி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகள் (Town Bus) அதிகபட்சம் செல்லும் தூரம் 25·5 கி.மி. என்றிருப்பதை இன்னும் அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆமெனில் எத்தனை கி. மீட்டர் வரை அதிகரிக்கப்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) 30 கி. மீ. வரை அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போதிலிருந்து செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 3]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிறைய பேருந்துகள் இந்தத் திட்டத்தின் அடிப் படையில் தற்போது ஓடிக்கொண்டு இருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 25 கிலோ மீட்டர் என்று இருந்ததை 30 கிலோ மீட்டர் என்ற அளவிற்கு டவுன் பஸ் பயணத் தூரத்தை உயர்த்தி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். பஸ் வசதி இல்லாத பல கிராமங்கள் இருப்பதால், இந்த நகரப் பேருந்து விடும் தூரத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி, 40 கிலோ மீட்டர் வரையில் விடுவதற்கு பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் 5 கிலோ மீட்டர் அதிகரித்துக் கொடுத்து இருக்கிறோம். இன்னும் அதிகப்படுத்திக் கொடுத் தால் நகரப் பேருந்துதான் இருக்கும் ; வேறு பேருந்து இருக்காது என்பதால் அதை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

[முற்பகல் 10—20]

திரு. கோ. விஸ்வநாதன் : தலைவரவர்களே, டவுன் பஸ் ஓடும் தூரத்தை 25 கிலோ மீட்டரிலிருந்து 30 கிலோ மீட்டர் அளவுக்கு கூட்டியிருப்பதால் புறநகர் பஸ்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? அதே நேரத்தில் டவுன் பஸ்களை அதிகமாக்கி, புறநகர் பஸ்களைக் குறைப்பதாக இருந்தால், இப்போது ஓடுகிற புறநகர் பஸ்களை டவுன் பஸ்களாக மாற்றும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார்கள் அது புறநகர் பஸ் என்று. அதை எப்படி நகரப் பேருந்து என்று மாற்றுவது என்று புரியவில்லை. அதை மாற்ற முடியாது.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, டவுன் பஸ்கள் செல்லும் தூரத்தை அதிகப்படுத்தியதினால் தமிழகத்தில் எவ்வளவு கிராமங்கள் பயனடைகின்றன ? எவ்வளவு ஏழை எளிய மக்கள் பயனடைகிறார்கள் ? மேலும் எத்தனை பஸ்கள் விடப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப் போது இருக்கிற நகரப் பேருந்துகள் 2,737. அதில் இருக்கிற ரூட்டுகள் 2,082. ஒட்டுமொத்தமாக ஏறத்தாழ 6,500 கிராமங் கள் புதிதாக வசதி பெறுகின்றன. ஏறத்தாழ 70 இலட்சம் முதல் 80 இலட்சம் வரை கிராம மக்கள் இதனால் பயனடை வார்கள் என்ற நிலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இப்போது நகரப் .பேருந்துகளை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் தடை விதித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த தடையை உடனடியாக நீக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே இதற்கு ஒரு விளக்கமான பதிலை இரண்டு தினங்களுக்கு முன்பாகச் சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு டீசல் விலையை உயர்த்திய பிறகு எங்களுக்குப் பேருந்துகளை விட சிரமமாக இருக்கிறது என்பதால் இனிமேல் விஞ்ஞான ரீதியில் பார்த்து, ஒவ்வொரு வகையிலும் ஆராய்ச்சி செய்து, ஒரே வண்டியை வைத்து பல இடங்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்கின்ற சூழ்நிலைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்வதற்காக கொஞ்ச காலத்திற்குத் தடை செய்திருக்கிறோம். ஆனால் தற்காலிகமாக தேவையான இடங்களுக்குப் பேருந்துகளைவிட விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்ந்து இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த நகரப் பேருந்துகளில் அதிகமாக எத்தனை பேர்களை ஏற்றலாம் என்று விதி இருக்கிறது ? இப்போது பல இடங்களில் பேருந்துகள் குறைவாகவிடப்படுவதால் அதிகமான பேர்களை ஏற்றி, நெருக்கடி ஏற்பட்டு, அதனால் பலவிதமான தொல்லைகள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அதிக பஸ் விடுவது மட்டுமல்ல ; ஒரு பஸ்ஸில் அதிகபட்சம் இத்தனை பேர்களைத்தான் ஏற்றுவது என்று கட்டாயமாக ஒரு விதி பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே அந்த விதி இருக்கிறது. அதைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு பேருந்திலே எத்தனை பேர்களை ஏற்றிக்கொள்வது என்பது ஒவ்வொரு பேருந்தையும் பொறுத்து இருக்கிறது, அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு பேருந்தில் 52 பேர் உட்காரவும், 25 பேர் நின்று போகவும் அனுமதி வழங்கப்படுகிறது. சில பேருந்துகளில் 40 பேர் உட்காரவும், 40 பேர் நிற்கவும் அனுமதி வழங்கப்படுகிறது. நிறைய பேருந்துகளை விடவேண்டுமென்ற கருத்தை பல சந்தர்ப்பங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். நிறைய பேருந்துகளை விட அரசுக்கு ஆசை இருக்கிறது. ஏறத்தாழ இந்த 11 மாத காலத்தில் 1400 பேருந்துகளை விட்டிருக்கிறோம். இன்னும் 2,000, 3,000 பேருந்துகளை விடுவதற்கு ஆசை இருந்தாலும் நிதிநிலைமைகளையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இன்னும் பல பேருந்துகளை விட வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கம் நிறையப் பேருந்துகளை விடும் சூழ்நிலை இல்லை. போக்கு

1981 மார்ச் 3]

வரத்துக் கழகங்கள் இலாபத்தில் இயங்கினால் உங்களுடைய எண்ணப்படி நிறைய .பேருந்துகளை விட தகுந்த ஏற்பாடு களைச் செய்யலாம். அதற்கான முயற்சியிலே எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து ஈடுபட்டால் நல்லது.

திருவில்லிப்புத்தூரில் சாக்லேட் செய்யும் தொழிற்சாலை.

*வினா எண் 354—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிபுத்தூர் டவுனில் கூட்டுறவு முறையில் பதனீரில் இருந்து சாக்லேட் மிட்டாய் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, பனை மரத்திற்கு அடியிலே இருந்து பாலைக் குடித்தாலும் சந்தேகப் படுகிறார்கள்; பதனீரைக் குடித்தாலும் சந்தேகப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அந்தத்தொழி லாளர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பனையிலிருந்து 6 மாதம் தான் பதனீர் வருகிறது. அவர்கள் நலனைக் கருதி, வருடம் முழுவதும் பதனீர் கிடைக்க ஆராய்ச்சி செய்து, அப்படி அதிகப்படியாகக் கிடைக்கின்ற பதனீரிலிருந்து சாக்லெட் மிட்டாய் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை புரிகிறது. பனைமரத்தில் இப்போது 6 மாதம்தான் பதனீர் கிடைக்கிறது. 12 மாதங்களும் பதனீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்று ஆராய்வதற்கு கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக் கழகத்தின் வைஸ் சான்சலரிடம் கேட் டிருக்கிறோம். அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பனை மரத்தையும் தென்னை மரத்தையும் 'கிராஸ் செய்து, 12 மாதங்களும் பதனீர் கிடைக்கும் சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்று பார்த்ததில் முடியும் என்ற சூழ்நிலை இருக் கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதற்கான முயற்சி விரை விலே நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.